செ.வெ.எண்: 05 நாள்: 02.12.2016

# பத்திரிகைச் செய்தி

தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அலுவலர் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டப் பயிலரங்கப் பயிற்சியும் கருத்தரங்க விவாதங்களும் நடைபெறுதல் தொடர்பாக.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு**

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித்திட்டச் செயலாக்கம் விரைவாகவும் முழுமையாகவும் தமிழ்மொழியில் செயல்படத் துணைபுரியும் வகையில் மாவட்டந்தோறும் அனைத்துத் துறை அரசு அலுவலர் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கப் பயிற்சி மற்றும் கருத்தரங்க நிகழ்வுகள் நடத்திட அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையில் அறிவுறுத்தப்பெற்றுள்ளபடி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலர் மற்றும் பணியார்களுக்கு 22.12.2016 மற்றும் 23.12.2016 ஆகிய இரு நாட்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கமும் கருத்தரங்கமும் நடைபெறவுள்ளதென அறிவிக்கப்பெறுகிறது.

முதல் நாள் 22.12.2016 அன்று காலை 10.00 மணிமுதல் மாலை 5.45 மணி வரையும் மறுநாள் 23.12.2016 அன்று காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரையும் ஆட்சிமொழித்திட்டப் பயிலரங்கம் நடைபெறும். அவ்வமயம் இம்மாவட்டத்திற்குட்பட்ட அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர் ஒருவரும் அமைச்சுப்பணியாளர் ஒருவரும் தவறாது கலந்து கொள்ளுதல் வேண்டும். கண்காணிப்பாளர் பணியிடம் இல்லாத நிலையில் அமைச்சுப் பணியாளர்கள் இருவர் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

மேலும் 23.12.2016 பிற்பகல் 3.00 மணி அளவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையுரையுடன் ஆட்சிமொழித் திட்டக் கருத்தரங்கம் தொடங்கப்பெறும். தமிழ்வளர்ச்சி இயக்குநர் அவர்களும், தமிழறிஞர்களும் பிற துறை அலுவலர்களும் கருத்துரையாற்ற உள்ளார்களென புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

மேலும் இப்பயிற்சிகள் தொடர்பான தகவல்களை அறிய விரும்புவோர் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களை அணுகி விவரம் தெரிந்து கொள்ளலாமென இச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பெறுகிறது.

அலுவலத் தொலைபேசி எண் : **04322 228840**

அலுவலரின் செல்பேசி எண் : **9003851962.**

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**